**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**

**O.S.No. 70 Of 2021**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | DW1 |
| **Name of the Witness** | : | விஸ்வகேது |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 16th day of February, 2026.

மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் விசாரணை செய்யப்படுகிறார் :-

இவ்வழக்கில் எனது சாட்சியத்தை சத்தியப்பிரமாண வாக்குமூலமாக கணிப்பொறி அச்சு செய்து கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதன் விவரங்களை என் வழக்கறிஞர் விளக்கி கூறினார். அதன் விவரத்தை தெரிந்து கொண்ட பிறகு நான் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். அதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக கருதிட வேண்டுகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | - | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் 2005-ன் படி தனக்கொடிக்கு வழங்கப்பட்ட தனி நபர் வேலைக்கான இலவச அட்டை அசல் | **Ex.B5** |

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை**

ஏற்கனவே என்னை விசாரித்து 5, 6 வாய்தாக்கள் பிறகு மீண்டும் மனு தாக்கல் செய்து நான் விசாரிக்கப்படுகிறேன் என்று சொன்னால் சரிதான். வாதி ராமசாமி புகார் கொடுத்தன் பேரில் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னை விசாரித்தார்கள். அவ்வாறு நடந்த பேச்சுவார்த்தையில் தாவா சொத்து வீட்டு சாவியை ஊர் பஞ்சாயத்தார்களிடம் ஒப்படைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தனக்கொடியின் 100 நாள் வேலை அட்டையை தற்போது சான்றாவணமாக தாக்கல் செய்துள்ளேன். பிவாதசாஆ 5 100 நாள் வேலை அட்டை

இவ்வழக்கிற்காக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 100 நாள் வேலை அட்டை எனது தம்பி சுந்தர்ராஜ் என்பவர் வீட்டில் இருந்தது. தனக்கொடியின் கைரேகையை மறுப்பதற்காக பிவாதசாஆ 5 ஆவணம் தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சுந்தர்ராஜ்க்கு என் அம்மா லட்சுமியம்மாள் 4வது அயிட்டம் தாவா சொத்தை செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதசாஆ 4 செட்டில்மெண்ட் பத்திரம் தான் அது என்றால் எனக்கு தெரியாது. 4வது அயிட்ட தாவா சொத்தில் சுந்தர்ராஜ், தனக்கொடியும் குடியிருந்தார்கள் என்றால் நாங்கள் அனைவரும் ஒன்றாக அங்கே வசித்தோம்., பிறகு மேற்கு பக்கம் தனியாக வீடு கட்டிக்கொண்டேன். 4வது அயிட்ட தாவா சொத்தில் சுந்தர்ராஜ் கடன் வாங்கி தான் வீடு கட்டினார் என்றால் சரிதான். அவ்வாறு சுந்தர்ராஜ் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியதற்கான ஆதாரம் தான் வாதசாஆ 5 ஆவணம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/- G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*